# Maersk @ APM Terminal CFS

* தேசப்படம் திருவிழா கண்ட,
August 15, 1947 ல்,
காணாமல் போன,
ஒரு தனியார் கூடம்!

* வெள்ளைக் காரர்களின்,
எச்சமாகிப் போன,
கோட்டு சூட்டுகளோடு;
இந்தப்பணியகமும்!

ஐரோப்பிய சமூகத்தின்
ஆனந்தக் கழிவு!

தமிழனுக்கும்; தமிழச்சிக்கும்;
பிறந்த இந்த தவப்புதல்வர்கள்,
ஐரோப்பியத்தில்;
அமிழ்ந்துபோன மிலேச்சர்கள்!

இவர்கள்தான்,
இந்தப் பணியகத்தின் வேலையாட்கள்!

* இந்தியாவுக்கு அப்பால்,
மனதால் வாழ்ந்து கொண்டு,
தாய் மண்ணை மதிக்க மறந்து,
அறியாமையோடு;
அறிவையும் அடகு வைத்தவர்கள்!

* இந்திய ராஜாங்கத்தின்;
சுங்கத்துறையை,
வீட்டுப் புறக்கடையில் வாழும்,
நாய்களாக்குவர்!

வாழ்வதும் வளர்வதும்
சுங்கத்தால் என்பதையும் மறந்து,
தந்தையை மதிக்காத தற்குறிகள்!

மல்லாக்கப் படுத்து,
மார்பில் துப்பிக் கொள்ளும்,
அற்புத ஜீவிகள்!

* வெளிச்சத்தால், வெளிச்சத்தில்
அழிவதை மறக்கும்,
விட்டில் பூச்சிகள்!

-- கு.ப. அசோகன், 13.01.2015 12.15 A.M.